தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1971 ஜூன் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 86, 87, 88, 89 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள், மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிப்போடப்படுகின்றன.

விற்பனை வரி ஏய்ப்பு

*** 90 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1968–69-ம் ஆண்டில் விற்பனை வரி செலுத்தாது ஏமாற்றியவர்களிடமிருந்து சோதனைகளின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1968–69-ம் ஆண்டில் விற்பனை வரியைச் செலுத்தாது ஏமாற்றியவர்களிடமிருந்து சோதனைகளின் மூலம் கிடைத்த வருமானம் பின்வருமாறு :—

வரி	ரூ. 1,30,89,745
அபராதம்	ரூ. 14,25,404
கம்பவுண்டிங் பீஸ்	ரூ. 2,45,921
மொத்தம்	ரூ. 1,47,61,070

திரு. பெ. மலைச்சாமி : வரி செலுத்தாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது என்றாலும் இனிமேல் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாவது விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விதிக்கப்படுகின்ற அபராதமே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1968–69-ம் ஆண்டுக்கான விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். 1969–70-ம் ஆண்டு வரி எவ்வளவு பாக்கியிருந்தது, அதில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் அளித்த விவரம் வரி பாக்கி வசூல் பற்றியதல்ல ; விற்பனை வரியைச் செலுத்தாது ஏமாற்றியவர்களை திடீர் என்று சோதனை போட்டுக் கணக்குகளைப்

பறிமுதல் செய்து அதன்மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதாகும். 1969–70-ம் ஆண்டுக்கான புள்ளி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. எஸ். முருகையன் : மாநிலத்தில் எந்த எந்த மாவட்டங்களில் அதிகப்படியாக வரி ஏய்ப்புகள் நடைபெற்றிருக்கின்றன ? அந்த இடங்களில் அடிக்கடி சோதனை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது தனியாக ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சோதனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்ட வாரியாக என்னிடம் புள்ளி விவரம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : வரி ஏய்ப்பின் அளவு பற்றிய மதிப்பீடு ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆண்டுதோறும் மாறிக் கொண்டே போகும். மதிப்பீடு அரசாங்கத்திடம் இல்லை. சோதனை செய்கிற அதிகாரிகளின் திறமையைப் பொறுத்தும், கணக்கு எழுதுகிறவர்களின் திறமையைப் பொறுத்தும் இது இருக்கிறது. 1968–69-ம் ஆண்டுக்கான புள்ளிவிவரம் நான் தந்தேன். அடுத்த ஆண்டுக்குரிய விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், திடீர் சோதனைகளின் மூலம் இந்த வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிப்பதைவிட வரி ஏய்ப்பே ஏற்படாமல், ஒழுங்காக வியாபாரிகள் நடந்துகொள்ள ஏதாவது வழிவகைகளைப்பற்றி அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழிவகைகளை அரசு செய்ய முடியாது. வியாபாரிகள் தாங்களாகவே திருந்தினாலொழிய வேறு வழி இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சோதனைச் சாவடிகளில் இருக்கும் அதிகாரிகளும் வரி ஏய்ப்புக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்களைப் பரிசோதனை செய்வதற்கு 'பறக்கும் படை' ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதிகாரிகளின்மீது சாட்டப்படுகிற இந்தக் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. நா. வீராசாமி : அரசாங்க அதிகாரிகள் எவ்வளவுதான் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும், சுறுசுறுப்பாகப் பணி யாற்றினாலும், வரியை ஏய்க்கக்கூடியவர்கள் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதிகாரிகளுக்குத் துணை புரிகின்ற வகையில் 'நான்-அஃபிஷியல்' குழுவை ஒவ்வொரு வட்டத்திற்கும் அமைத்து, அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

1971 ஜூன் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கணக்குகளைக் கண்டு பிடிக்க அப்படிப்பட்ட குழுக்களை ஏற்படுத்தினால், அரசியல் கண்ணோட்டம் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்படுவோம்.

திரு. கே. ஏ. வகாப் : திடீர் சோதனையின் மூலம், சில நேரங்களில், தவறு செய்யாத வியாபாரிகள்கூட பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்ற பரவலான எண்ணம் வியாபாரிகளிடையே இருக்கிறது. தவறு செய்யாத வியாபாரிகளுக்குத் துன்பம் வராமல் காக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துர்பாக்கியவசமாக வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கச் சோதனை செய்ய அதிகாரிகள் போகுமிடங்களில், புதையல் கிடைப்பதுபோல் கணக்குகள் அகப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : When the sales tax exemption limit has been fixed at Rs. 15,000—now it has been increased to Rs. 25,000—when such exemption is given, is it not a fact that after a dealer completes Rs. 25,000 worth of sales, he deals in some other names in the same place or even before completing the limit he gives bills in two or three names thus evading sales tax?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படிச் செய்கின்ற வியாபாரிகள் இருப்பார்களானால் கனம் அங்கத்தினர் தயவு செய்து அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திடீர் சோதனை செய்யும் விசேஷ அதிகாரிகள்—நான் அறிந்த வரையில்—வெகு திறமையாகப் பணியாற்றி அதிகமாகப் பணத்தை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவேன். அம்மாதிரி திடீர் சோதனை மூலமாக சில முக்கியமான இடங்களில் தவறுகளைக் கண்டுபிடித்து, வரி ஏய்ப்புப் பணத்தை வசூலிக்கும் அதிகாரிகளுக்குச் சன்மானம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சன்மானம் வழங்கப் படுகிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

விற்பனை வரி விலக்கு

* 91 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு வியாபாரிகளுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது போன்ற கோரிக்கைகள் வியாபாரிகளிடமிருந்து வந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையிலுள்ளன. இந்த பதில், மூலக் கேள்வி கேட்ட